# தர்ம வாஹினி

☼

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா

☼

தமிழாக்கம்

Published by

Sri Sathya Sai Books and Publications Trust, Tamilnadu

Old No. 16/ New No.41, Ramakrishnan Street,

Perambur, Chennai-600011.

## அத்தியாயம் 4

மனிதர்கள் பல்வேறு கடமைகள், உரிமைகள், பொறுப்புகள் ஆகியவைகளைப் பற்றிக் குறிப்பிடுவார்கள். ஆனால் அவைகள் எல்லாம் அடிப்படைச் சத்தியதர்மங்கள் அல்ல; வாழ்க்கைச் சிக்கல்களை ஒழுங்குபடுத்தும் சில வழிகளே. அதனால் அவைகள் அவ்வளவு முக்கியமானவைகள் அல்ல. ஆண், பெண் ஆகிய இருவரே இத்தனை தர்மகர்மங்களுக்கும் காரணமானவர்கள். இந்த இருவரே பிரகிருதி, பரமாத்மா; ஜடம் சைதன்னியம் எனப்படுவர்கள். இந்த ஜட, சைதன்னியத்தின் சம்பந்தத்தாலேயே உலகில் உயிரினங்கள் தோன்றுகின்றன. இத்தனை தர்மங்களும் எதற்காக ஏற்பட்டன, இத்தனை தர்மக்கோட்பாடுகளை வகுக்கக் காரணம் என்ன என்று ஆழ்ந்து சிந்தித்தால், இவைகள் அனைத்தும் ஆண், பெண் என்ற இந்த இருவருக்காக ஏற்பட்டவைகளே. இவர்களின் செயல்கள், ஆசாரங்களே உலகத்தில் மிக முக்கியமான தர்மங்களாகத் திகழ்கின்றன. பெரிய மகான்களாக இருந்த போதிலும் சரியே அவர்கள் எவ்வளவு விளக்கமாக கூறிய போதிலும் அந்த விளக்கங்கள் இந்த இருவரும் அநுசரிக்க வேண்டிய தர்மங்களுக்கு உள்ளடங்கியதாகத் தான் இருக்குமே தவிர, இதனைக் கடந்ததாக இருக்க முடியாது.

ஸ்திரீ தர்மம், புருஷ தர்மம் ஆகிய இந்த இரண்டு முக்கியமான தர்மங்களைத் தவிர மற்றவை எல்லாம் இதனுடைய அங்கங்களே. கோதாவரி நதியில் பல சிற்றாறுகள் கலப்பதைப் போல, அவசர, அவசியங்களைப் பொறுத்து ஏற்பட்ட தர்மம்கள் இந்த இரண்டு தர்மங்களோடு ஒன்றுசேருகின்றன. முக்கியமான நதியை மட்டும் பொருட்படுத்துகிறோமே தவிர அதனுடன் ஒன்று சேரும் சிற்றாறுகளைக் கணக்கில் சேர்ப்பதில்லை யல்லவா? அது போல, பிரதானமான பிரகிருதி தர்மங்களை மட்டும் ஆதாரமாக எடுத்துக் கொள்ள வேண்டுமேதவிர, அதில் ஒன்று சேரும் உபதர்மங்களைக் குறித்துக் கவலைப்பட வேண்டியதில்லை. இவைகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்தால் அநுசரிக்க வேண்டிய தர்மங்கள் இரண்டே என்று தெளியலாம். அவைகளே ஸ்த்ரீ தர்மமும், புருஷ தர்மமும்.

ஸ்திரீ தர்மம் : பெண்களைக் கடவுளின் சக்தி என்பார்கள். அதுவே மாயையுங் கூட, இந்த இரண்டின் (சக்தி, மாயை) உருவமே பெண். அதனாலேயே பெண்ணை பராசக்தியின் வடிவம் என்று சொல்லுகிறார்கள். பெண், மனிதனின் நம்பிக்கைகுரிய தோழி: வாழ்க்கையின் அருஞ்செல்வம், இறைவனின் சங்கல்பத்தின் பருப்பொருள்; இயற்கையின் விசித்திரம். இயற்கையின் அற்புதங்களுக் கெல்லாம் அற்புதம். பெண் வீட்டுக்கு அரசி, சக்தியின் பிரதிநிதி; வீட்டுக்கு லக்ஷ்மி போன்றவள் பெண்ணே. மனிதனுக்கு இனிமையான துணைவி. சக்தி ஸ்வரூபிகளான பெண்கள், ஆண்களைக் காட்டிலும் எந்த விதத்திலும் தாழ்ந்தவர்கள் அல்லர். இயற்கையாகவே அவர்கள் பொறுமை, சகிப்புத்தன்மை, பக்தி, பிரேமை ஆகியவை நிறம்பியவர்கள்.

நற்குணங்கள் அனைத்துக்கும் இருப்பிடமானவர்கள் பெண்கள். அவர்களுக்கு உள்ள அளவு மனக் கட்டுப்பாடு ஆண்களுக்கு இருப்பதில்லை. அத்யாத்மிகப் பாதையில் முன் மாதிரியாகத் திகழ்பவர்கள் பெண்கள். தன்னலமற்ற, பரிசுத்தமான பிரேமை பெண்களின் பிறப்புரிமை. அறிவும், அன்பும், அற நோக்கும், பண்பும் நிறைந்த பெண்கள் வீட்டுக்குத் திருவைப் (வக்ஷ்மி) போன்றவர்கள். எந்த வீட்டில் கணவனும் மனைவியும் பவித்திரமான பிரேமையில் கட்டுண்டிருப்பார்களோ, எங்கே தம்பதிகள் ஒன்று சேர்ந்து ஆன்மிக நூல்களைப் படித்துப் பாராயணம் செய்வார்களோ, எங்கே இருவரும் ஹரிநாம சங்கீர்த்தனம் செய்து கொண்டிருப்பார்களோ அந்த வீடே வைகுண்டம். கணவனுடன் அன்பால் பிணைக்கப்பட்ட மனைவி, அருமையான மணம் பரப்பும் மலர். நற்குணங்கள் நிரம்பிய மனைவி கணவனுக்குச் சூடாமணி: ஒளி வீசும் ரத்தினம்.

பெண்களுக்குப் பதிவிரதா தர்மமே லட்சியம். அந்த நற்பண்பின் சக்தியைக் கொண்டு அவர்கள் எதையும் சாதிக்கும் வலிமை பெறுகிறார்கள். அந்த மகத்தான சக்தியைக் கொண்டு தான் சாவித்திரி இறந்த கணவனின் உயிரை மீட்டாள். அத்திரி முனிவரின் மனைவியும், தத்தாத்ரேயரின் தாயுமான அநுசூயா தேவியின் கற்பின் சக்தி உலகறிந்த விஷயமே. அந்த சக்தியை கொண்டு திரி மூர்த்திகளையும் குழந்தைகளாக மாற்றினாள்.

நளாயினி, தொழுநோய் பிடித்த தன் கணவனின் உயிரைக் காப்பதற்குக் கதிரவனின் சஞ்சாரத்தையே தடை செய்தாள்.

கற்பே பெண்ணுக்குச் சிறந்த தலையணி (கிரீடம்) போன்றது. கற்புடைய பெண்ணை உலகமே போற்றிப் புகழும். இந்த பண்புடைய பெண்ணின் சக்தியை விரித்துரைப்பது இயலாத காரியம். எவ்வளவு பெரிய துன்பம் நேர்ந்தாலும், இந்தக் கற்பின் சக்தியே அவளைக் காத்து இரட்சிக்கும். கற்பே பெண்ணின் உயிர்மூச்சு. கற்பின் மகிமையால் பெண் தன்னைத் தானே காத்துக்கொள்வது மட்டுமின்றி, வானுலகையும் (சுவர்க்கத்தையும்) அடைவாள்; இதில் சந்தேகமே இல்லை. தன்னைக் கெட்ட நினைவோடு நெருங்கவந்த வேடனை ஒரேயொரு சொல்லின் மூலம் சாம்பலாக்கினாள் தமயந்தி. அரசனான நளன், நாடு நகரம் அனைத்தையும் இழந்து, உடுத்திய உடையோடு காட்டுக்குச் சென்றபோது, தமயந்தி மகிழ்வோடு கணவனைப் பின் தொடர்ந்து சென்று அவனுடைய துன்பத்தில் பங்கேற்றாள்.

பெண்ணுக்கு நாணம் (லஜ்ஜை) அணிகலன் போன்றது. அதன் எல்லையைத் தாண்டுவது பெண் தர்மத்துக்கே மாறான செயல், தர்ம விரோதமான செயல் மட்டுமல்ல, அதனால் பெண் அநேக அபாயங்களுக்கும் உள்ளாக நேரிடும்; பெண்மையே ஒளி இழந்து விடும். அழகும் நாகரிகமும் உள்ளவளாக இருந்த போதிலும், நாணம் இல்லை என்றால், அது பெண்ணை வெறுமையாகத் தோற்றுவிக்கும். எளிமை, பணிவு, சுறுசுறுப்பு இனிய சுபாவம், உயர்ந்த தத்துவங்களின்மேல் பற்றுதல், அடக்கம் ஆகியவைகளின் கூட்டுக்கலவையே நாணம். நாணம் என்பது பெண்ணுக்கு மாசற்ற அணிகலன். நாணமுடைய பெண் இயற்கையாகவே எல்லையை மீறிப் போக மாட்டாள். நாணமே அவளைப் போக விடாது. அவள் எப்பொழுதும் நற்செயல்களில் ஈடுபடுவாள். உண்மையிலேயே ஒரு பெண் உயர்ந்தவள் என்பதற்கு நாணமே அடையாளம். நாணமற்ற பெண் தன் பெண்ணினத்திற்கு துரோகமிழைத்தவளாவாள். அவள் மணமற்ற மலர். சமூகத்தில் அவளுக்கு எந்தவிதமான கௌரவமும் கிடைக்காது. எத்தனை நற்பண்புகளுக்கு இருப்பிடமாக இருந்தாலும் நாணம் ஒன்று மட்டும் இல்லையென்றால் அவள் வாழ்வே வெறுமைதான்.

நாணம், பெண்ணைத் தெய்வநிலைக்கு உயர்த்துகிறது. நாணமுடைய பெண், வீட்டிலும், வெளியிலும், ஏன் உலகமுழுவதும் நன்மதிப்பைப் பெற்று உயர்வாள்" நாணம் எப்பதையே மறந்து திரியும் பெண்களைத்தான் இன்றைக்கு உலகம் கௌரவிக்கிறது” என்று சிலர் சொல்லலாம். இன்றைய நடவடிக்கைகளை நான் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அதில் தலையிட நான் விரும்பவில்லை. அவர்களை சிலர் கௌரவிக்கலாம்; மரியாதை செலுத்தலாம். அவைகள் உண்மையான கௌரவம் அல்ல. கௌரவத்துக்கு அருகதையற்ற அவர்களுக்குத் தரும் மரியாதையை அவமரியாதையாகவே கொள்ள வேண்டும். அவைகளை உண்மையான கௌரவம் என்று பாவிப்பதுகூடத் துரோகம். அவைகள் வெறும் முகஸ்துதி. அந்த வீண்புகழ் கழிவுப் பொருளுக்குச் சமமானது.

நாணமுடைய பெண் இப்படிப்பட்ட கௌரவத்துக்கோ, பெயருக்கும் புகழுக்குமோ ஆசைப்படமாட்டாள். தன்னுடைய நிலையை நன்றாக உணர்ந்து, தன் நடவடிக்கைகளை ஒரு வரையறைக்குள் வைத்துக்கொள்வாள். அவளுக்குத் தெரியாமலேயே கௌரவம் அவளைச் சென்று அடையும். மலர்களில், தாமரையில் உள்ள தேன், வண்டுகளை வருத்தியழைப்பதில்லை; தேனீக்களை வரவேற்பதில்லை. தேனைச் சுவைக்க அவைகளே அந்த மலர்களைத் தேடிக்கொண்டு வந்து கூடுகின்றன. தேனுக்கும், வண்டுக்கும் உள்ள தொடர்பே அதற்கு காரணம். நாணமுடைய பெண்ணுக்கும் அவளைத் தேடிவரும் கௌரவத்துக்கும் உள்ள தொடர்பும் இதைப் போன்றதே. பவித்திரமான பெண் கௌரவத்துக்கோ புகழுக்கோ ஆசைப்படமாட்டாள்; அது அவளுடைய ஆத்ம தர்மம்.

தாமரை மேல் அமர்ந்திருக்கும் தவளை, தான் தாமரை மேல் அமர்ந்திருக்கிறோம் என்று பெருமைப்படலாம். ஆனால் கமலத்தின் மேல் உள்ள மகரந்தத்தை சுவைக்க முடியுமா? அல்லது அதன் அழகைத்தான் ரசிக்க முடியுமா? உண்மையில் தாமரையைப்பற்றித்தான் அதற்கு ஏதாவது தெரியுமா? இந்த கௌரவம் அதைப் போன்றதே. குப்பைமேட்டில் தவளைகள் உட்கார்ந்திருப்பதைப் போல, வீண் கௌரவத்துக்கு ஆசைப்படுபவர்கள், அதனுடைய பொருள், உண்மையான தர்மம், நம்பிக்கை, மதிப்பு, எதையுமே

அறிந்துகொள்ளவில்லை. அப்படிப்பட்டவர்கள் பெறுவது கௌரவமா? மரியாதையா? இல்லை, இல்லை அது ஒரு வகையான வியாதியே.

நாணமற்ற பெண்ணை, பெண் என்று சொல்வதைக்கூட ஆத்ம தர்மம் ஒப்புக்கொள்வதில்லை. ஆத்ம தர்மத்துக்கு மாறான கௌரவம் இறந்த உடலை அலங்கரிப்பது போன்றதே. வெறும் சடலத்துக்கு எவ்வளவு அலங்காரங்கள் செய்த போதிலும், அந்த உடலைவிட்டு வெளியேறிய உயிர் அவைகளை அனுபவிப்பதில்லை, அல்லவா? உண்மை நிலையைப் புரிந்து கொண்டவர்களுக்குக் கீர்த்தி, கௌரவம் என்னும் சிறப்பை யார் அளிக்கிறார்கள்? இந்த அர்த்தமற்ற மரியாதைக்கு ஆசைப்படாமல், ஆத்ம தர்மத்துக்கே தன்னை அர்பணித்துக்கொள்ள வேண்டும். இதுவே நாணம் உடைய பெண்ணின் இயல்பு. அந்த இயல்புடைய குடும்பத் தலைவியை கிருஹலக்ஷ்மி என்று அழைக்கிறார்கள்.

மேற்கண்ட இயல்புகள் எதுவுமற்ற பெண் உள்ள வீடு அழகிழந்து நிற்கும். மதமும், குடும்பமும் நிலைத்து நிற்பதற்கும், அழிந்துபடுவதற்கும் பெண்ணே காரணம். பெண்களுக்கு இயல்பாகவே மதம், ஆன்மிகம் ஆகியவைகளில் நம்பிக்கை மிகுதி. பக்தி, விசுவாசம், பணிவு ஆகியவை கொண்ட பெண்கள் தங்கள் கணவர்களைக் கூட இறைவழியில் இட்டுச் செல்லவும், ஆசார தர்மங்களில் விருப்பம் கொள்ளவும் செய்ய வல்லவர்கள். குடும்பத் தலைவி விடியற் காலையிலேயே எழுந்துவிடுவாள். வீட்டைச் சுத்தம் செய்து, தானும் குளித்து, தன்னைப் புனிதப்படுத்திக் கொண்டு, பின்னர் தியானம், வழிபாடு இவைகளில் ஈடுபடுவாள். பிரார்த்தனைக்காகத் தங்கள் வீட்டில் ஒரு சிறிய அறையைப் பூஜை அறையாக ஏற்படுத்திக் கொள்ளுவாள். அந்த அறையில் கடவுள் படங்கள், விக்கிரகங்கள், பக்தர்கள், மகான்கள், ஞானிகள், வழிகாட்டிகள் ஆகியவர்களின் படங்களை வைத்து அலங்கரிப்பாள். அந்த அறையைப் புனிதாமன கோயிலாகவே பாவித்து, காலையிலும், மாலையிலும் வழிபாடியற்றுவாள். பண்டிகை போன்ற முக்கியமான நாட்களில் பிரார்த்தனை, பஜனை, ஆரத்தி முதலியவைகளைச் சிறப்பாகச் செய்வாள். அப்படிப்பட்ட பெண் தன் பொறுமையாலும், விடாமுயற்சியாலும், இறை நம்பிக்கை இல்லாத தன் கணவனைக் கூட - அவன் பிராத்தனைகளில் ஈடுபடாவிட்டாலும் - சமூகத்துக்கு உபகாரமான

நற்செயல்களில் ஈடுபட்டு, அவைகளையே தெய்வ சமர்ப்பணமாக செய்யும்படி மாற்றி விடுவாள்.

வீட்டைக் காப்பவள் பெண்ணே , அதுவே அவளுடைய தர்மம். பெண்கள் சக்தி ஸ்வரூபிகள். ஆன்மிக வழியில் செல்ல முயலும் கணவனை, மனைவி புலனாசை என்னும் அழிவுப் பாதையை நோக்கி இழுத்தாலும், அல்லது இறைவழியில் முன்னேறும் மனைவியைக் கணவன் உலக சுகத்தில் இச்சை கொள்ளும்படித் தூண்டினாலும், அவர்கள் வாழும் வீடு நரகத்துக்குச் சமமானது. அதைப் பேய் பிசாசுகள் நடமாடும் இல்லம் எல்லாம்.

அப்படியின்றி உண்மையிலேயே பெண் ஆத்மாவைப் பற்றி அறிய முயல வேண்டும். இறைவனின் சன்னிதானத்தை அடைய ஆசைகொள்ள வேண்டும்.

எந்த வீட்டில் கணவனும் மனைவியும் உயர்ந்த நோக்கங்களின் நிழலில் வாழ்கிறார்களோ, எந்த இல்லத்தில் ஹரி நாம சங்கீர்த்தனம் செய்து கொண்டு நற்செயல்களில் ஈடுபட்டிருக்கிறார்களோ, சத்தியத்தைக் கடைப்பிடிப்பது அன்பும் அருளும் கொண்டு, சாந்தி நிறைந்தவர்களாய், தர்ம நூல்களைப் படித்து, புலன்களைக் கட்டுப்படுத்திக்கொண்டு, சகல உயிரினங்க இடத்தும், சம நோக்கோடு அன்பு செலுத்துகிறார்களோ அந்த வீட்டில் லக்ஷ்மி வாசம் செய்வாள். அந்த இல்லம் அமரர் வாழும் உலகமாக இருக்கும்.

உன்னதமான பண்புகள் நிறைந்தவளே, மனைவி என்ற பெயருக்குத் தகுதியுடையவள். கணவனிடம் உண்மையான அன்பு பூண்ட மனைவி கிருஹலக்ஷ்மி, தர்மபத்தினி; அறம், பொருள் இன்பம் என்னும் மூவகை அறங்களைப் பெற உதவுபவள் பெண்ணே. கணவனின் மனமறிந்து இனிமையாகப் பேசும் மனைவி அவனுக்கு மனைவி மட்டுமல்ல, அறவழியைக் காட்டும் போது அவளே தந்தை. நோயுற்றுத் தவிக்கும் போது அவளே தாய்.

கணவனுடைய விருப்பம், ஏவல், சேவை ஆகியவைகளையே நித்திய வழிபாடாக ஏற்று, அவைகளையே நிறைவேற்றி, அதன் பின்னரே அவள் இறைவழிபாட்டைக் கவனிக்க வேண்டும். கணவனைத் திருப்திப்படுத்தாமல், தெய்வ ஆராதனை மூலமாக மட்டும் ஆத்மானந்தத்தை அடைய முடியாது. கணவனிடத்தில் இறைவனைக் கண்டு, கணவனுக்குச் செய்யும் சேவையையே இறைவனுக்குச் செய்யும் தொண்டாகப் பாவித்துச் செய்யும் மனைவி, பெண் தர்மங்கள் அனைத்தையும் நிறைவேற்றியவளாவாள். செய்யும் செயல்களை எல்லாம் ஆத்மாவுக்குச் செய்யும் சேவையாக எண்ணிச் செய்தால், அவை பரம் பொருளுக்குச் சேவை செய்த பலனை தரும்.

கணவன் எப்படிப்பட்டவனாக இருந்தபோதிலும், மனைவி அவனை மகிழ்வித்து, மெதுவாகப் பொறுமையைக் கையாண்டு அவனை நல்வழியில் திருப்பி, இறைவனின் அருளுக்குப் பாத்திரமாகும்படி மாற்ற வேண்டும். கணவன் எப்படிப் போனால் என்ன, தான் மட்டும் இறையருளுக்குப் பாத்திரமானால் போதும் என்ற நினைவே அறத்துக்கு மாறானது; இது பெண்ணின் இயல்பே அல்ல. கணவனின் நலன், மகிழ்ச்சி, அவனுடைய விருப்பம் ஆகியவைகளைத் தன்னுடையதாகவும், கணவன் நற்கதியடைந்தால் அதுவே தனக்குப் பாதுகாப்பு என்றும் கருத வேண்டும். அப்படிப்பட்ட பெண்ணுக்கு இறைவனின் கருணை முயற்சியின்றியே கிட்டும்; இறையருள் மழையாகப் பொழியும். அந்தப் பெண்ணுக்கு இறைவன் சகல காரியங்களிலும் உறுதுணையாய் நின்று, நிறைந்த கருணையைச் சொரிவார். அந்தப் பெண் மட்டுமின்றி, அவளுடைய கணவனும் கூட நற்கதி அடைவான்.